**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திரு. P. ரஞ்சித்குமார், பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,**
**சத்தியமங்கலம்.**

**2026ம் வருடம் ஜூன் மாதம் 19 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**சி.எம்.பி. எண். 81/2026**

**in**

**குற்ற எண். 57 /2026**

ரவிச்சந்திரன்,
த/பெ.சாமிநாதன்,
ரங்கசமுத்திரம்,
தேள்கரடு வீதி,
சத்தியமங்கலம். ....மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

கௌதம்ராஜ் .....எதிரி

/எதிர்/

உதவி காவல்துறை ஆய்வாளர்,
சத்தியமங்கலம் காவல் நிலையம்,
குற்ற எண்.57/2026 ....எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

மனுதாரர்/வாகன உரிமையாளர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை இந்நீதிமன்றம் கடந்த 30.03.2026ம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துள்ளது. மனுதாரர்/வாகன உரிமையாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.என்.நவீன்குமார்,பி.காம்.,பி.எல்., அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும், எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும் இம்மனு எதிருரை இவ்வழக்கு கட்டு ஆகியவற்றை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர்/வாகன உரிமையாளர் தரப்பில் இம்மனுவானது குற்ற எண்.57/2026 ன் கீழ் சத்தியமங்கலம் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்ட மனுதாரர்/வாகன உரிமையாளருக்கு சொந்தமான TN 33 W 3688 என்ற எண்ணுள்ள Mahendra Bolero

என்ற நான்கு சக்கர வாகனத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட்டு மனுதாரர்/வாகன உரிமையாளருக்கு இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடவேண்டி பிரிவு 497 BNSS –ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டது.

**2.மனுதாரர்/வாகன உரிமையாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

மனுதாரர் மேற்படி வழக்கில் மனுதாரர்/வாகன உரிமையாளரின் மகன் கௌதம்ராஜ் எதிரி என்றும், மேற்படி வழக்கில் 12.02.2026–ம் தேதியன்று மனுதாரர்/வாகன உரிமையாளரின் பதிவு எண்.TN 33 AW 3688 கொண்ட வாகனத்தின் மீதும், எதிரி மீதும் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தாரால் U/S 304(2) BNS act–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், காவல் நிலையத்தார் மனுதாரரின் வாகனம் அங்கு நின்று கொண்டிருந்த காரணத்தினால் பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி வழக்கில் மனுதாரர்/வாகன உரிமையாளருக்கு சொந்தமான Mahendra Bolero பதிவு எண்.TN 33 AW 3688 கொண்ட நான்கு Rocky BEAC கலர் வாகனத்தை வழக்கில் சேர்த்து விட்டார் என்றும், மேற்படி இரு சக்கர வாகனத்தை மேதகு நீதிமன்றத்தில் பி.ஆ.எண். 176/2026–ல் கடந்த 18.03.2026–ம் தேதியன்று நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனுதாரரின் நான்கு சக்கர வாகனம் தற்பொழுது அவசியமாக மனுதாரருக்கு தேவைப்படுகிறது என்றும், எனவே மனுதாரரது நான்கு சக்கர வாகனத்தை இடைக்கால பொறுப்பில் திரும்ப ஒப்படைத்தால் நீதிமன்றத்தார் உத்திரவிடும் சமயத்தில் மனுதாரர் திரும்பவும் ஒப்படைக்க தாயாராக உள்ளதாகவும். மேற்படி நான்கு சக்கர வாகனத்திக்காக மனுதாரர் நீதிமன்றத்தார் உத்திரவிடும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாகவும், நான்கு சக்கர வாகனம் மனுதாரருக்கு ஒப்படைக்காவிடில் நான்கு சக்கர வாகனம் வெயில் மற்றும் மழையால் சேதமடைந்து விடும் என்றும் மனுதாரரின் நான்கு சக்கர வாகனமான Mahendra Bolero பதிவு எண். TN 33 AW 3688 கொண்ட நான்கு Rocky BEAC கலர் வாகனத்தின் Engine No.GA64D26777, Chassis No. MA1XB2GAK62D27047 அதன் மதிப்பு சுமார் ரூ.1,00,000/– என்றும், மனுதாரரது நான்கு சக்கர வாகனம் கோபி வட்டார கன்சல்டிங் அசோசியேசன் யுவராஜ் என்பவரிடம் வாங்கியது என்றும், மனுதாரரது நான்கு சக்கர வாகனத்தை இன்னும் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றும், இப்போது மனுதாரரின் நான்கு சக்கர வாகனம்

திருமாறன்சுப்பையா என்பவரின் பெயரில் உள்ளது என்றும், மேற்படி கோர்ட்டார் உத்திரவிடும் பேரில் மனுதாரரது வாகனத்தை பெற்றுக் கொண்டு ஒரு மாத கால அவகாசத்தில் மனுதாரரது பெயரில் மாற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளதாகவும், ஆகவே மேதகு கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து மனுதாரருக்கு சொந்தமான Mahendra Bolero பதிவு எண்.TN 33 AW 3688 கொண்ட நான்கு Rocky BEAC கலர் வாகனத்தை மனுதாரருக்கு இடைக்கால பொறுப்பில் திரும்ப தருவதற்கு உத்திரவு வழங்குமாறும் மனுதாரரது பொறுப்பில் ஒப்படைத்து உத்திரவிடுமாறு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் மேற்படி வழக்கில் மனுதாரரின் மகன் கௌதம்ராஜா என்பவரிடம் இருந்து வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்தை ஒப்படைத்தால் மீண்டும் குற்ற செயலில் ஈடுபடுத்தக்கூடும் என்பதால் வழக்கு சொத்தை ஒப்படைக்க கடும் ஆட்சேபணை செய்யப்படுகிறது என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.தீர்வு**

மனு ஆவணங்கள், அரசு தரப்பு எதிருரை மற்றும் மனுதாரர் தரப்பு வாதம் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு PR No.176/2026 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தான் சொத்தின் உரிமையாளர் என்றும் அதற்கான ஆவணங்கள் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனுச்சொத்தான மேற்படி வாகனத்தை பயன்படுத்தாமல் நிறுத்தி வைத்திருப்பதால் ஏற்படும் இழப்பை கருத்தில் கொண்டும் **"Suderbhai Ambalal Desai Vs State of Gujarat 2002 Supp (3) SCR 39"** என்ற வழக்கில் மாண்பமை உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ள மேற்கோள்களை கருத்தில் கொண்டும், மேற்படி மனுசொத்தான Mahendra Bolero பதிவு எண்.TN 33 AW 3688 கொண்ட நான்கு சக்கர Rocky BEAC கலர் கொண்ட வாகனத்தை கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் மனுதாரர் வசம் இடைக்காலமாக கொடுப்பது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>நிபந்தனைகள்:</u>**

1. மனுதாரர் மனுச்சொத்திற்காக தானும் தனக்காக ஒரு நபர் ரூ. 3,00,000/- பிணைமுறி இயற்றிக் கொடுக்க வேண்டும்.

2. மனுச்சொத்தினை நான்கு கோணங்களிலும் கலர் போட்டோ எடுத்து அதில் மனுதாரர் கையொப்பமிட்டு அதனை சிடி மற்றும் பாரதிய சாக்ஷிய அதினியம் சட்டம் பிரிவு 63 படி சான்றிதழுடன் தாக்கல் செய்ய வேண்டும்

3. மேலும் வாகனத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ, அடமானம் செய்யவோ மற்றும் எந்தவித வில்லங்க பாராதீனம் செய்யவோ கூடாது.

4. மனுசொத்தினை மனுதாரரின் பெயரில் மாற்றி இரண்டு மாத காலத்திற்குள் அதன் பெயர் மாற்றம் செய்த அசல் ஆர்.சி புத்தகத்தை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

5. மேலும் மனுதாரர் வாகனத்தின் அசல் ஆர்,சி புத்தகத்தை இந்நீதிமன்றத்தின் தலைமை எழுத்தரிடம் சமர்பித்து, தலைமை எழுத்தர் அதன் நகலை பெற்று அசலுடன் சரிபார்த்து வழக்கு கட்டினுல் வைக்க வேண்டும், அசலை மனுதாரர் வசம் திரும்ப அளித்துவிட்டு அதற்கான ஆதரவை மனுதாரரிடம் இருந்து பெறவேண்டும்.

6. தலைமை எழுத்தர் பஞ்சநாமா தயார் செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவேண்டும்

7. நீதிமன்ற விசாரணைக்கு வேண்டும் பொழுது மேற்படி மனுச்சொத்தினை ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. மேற்படி நிபந்தனைகளை கடைபிடிப்பதாக உறுதி மொழி பத்திரம் எழுதி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவேண்டும்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் நாளில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.06.19 16:17:05 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.